
**Tamil Edition**

WELLINGTON REGION
EMERGENCY MANAGEMENT

# நிலநடுக்கத்தின் போதான உங்கள் திட்டத்திற்கு வழிகாட்டி

## இதை எடுத்து இப்போதே ஆயத்தமாகுங்கள்




## இப்போதே

### 1. அவசர நிலையின் போது தகவல்களை அறிந்து கொள்ளுங்கள்

அவசர நிலை ஏற்படும் போது, பொதுமக்கள் நம்பகமான மற்றும் அதிகாரப்பூர்வமான தகவல்களைப் பெற பல ஊடகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றில் ரேடியோ ஒளிபரப்புகள், செய்தி ஊடகங்கள், தொலைக்காட்சி நிறுவனங்கள், WREMO மற்றும் உள்ளூர் கவுன்சில்களின் அதிகாரப்பூர்வ தொடர்பு தளங்கள், மேலும் Emergency Mobile Alerts ஆகியவை இடம்பெறும்.

வெலிங்டன் பிராந்தியத்தின் முழுமையையோ அல்லது குறிப்பிட்ட பகுதிகளையோ பாதிக்கக்கூடிய உயிர் அச்சுறுத்தல் நிலைமைகள் அல்லது முக்கியமான செயல்பாட்டு தடங்கல்கள் உருவாகும் சூழ்நிலைகளில் மட்டுமே Emergency Mobile Alerts அதிகாரப்பூர்வமாக வெளியிடப்படும்.

**இயற்கை சார்ந்த எச்சரிக்கை அறிகுறிகளை அறிந்து கொள்ளுங்கள்:**

நீங்கள் சுனாமி அபாயப் பகுதி ஒன்றில் வசிப்பவராயின், நீடித்த அல்லது மிக வலுவான நிலநடுக்க அதிர்வுகளை உணர்ந்தால், அதிர்வு நின்றதும் உடனடியாக உயர்ந்த நிலப்பரப்புகளுக்கோ அல்லது கரையோரத்திலிருந்து விலகிய பகுதிகளுக்கோ செல்லுங்கள்

**அவசரநிலை நேரங்களில் தகவல்ளை பெறுவதற்கான சிறந்த மூலங்கள்:**

- WREMO வினது வலைத்தளத்தை பாருங்கள் www.wremo.nz
- WREMO வினது முகநூல் பக்கத்தை LIKE பண்ணுங்கள் facebook.com/WREMOnz
- உங்கள் உள்ளூர் கவுன்சிலின் வலைத்தளத்தையும் அவர்களின் சமூக வலைத்தளங்களையும் பார்வையிடுங்கள்.
- Radio New Zealand ஐயும் உள்ளூர் வானொலி நிலைய ஒலிபரப்புக்களையும் கேளுங்கள்.ங்கள்.ww

# வாழ்த்துக்கள்! பாதுகாப்பாக இருப்பதற்கான முதல் அடியை நீங்கள் எடுத்து விட்டீர்கள்

வெலிங்டன் பிரதேசம் வாழ்வதற்கு ஒரு வியத்தகு இடம். ஆனால் இயற்கை சீற்றங்கள் கொஞ்சம் அதிகமாக இடம்பெறும் இடம்.

நாம் அடிக்கடி நிலநடுக்கம், புயல் , வெள்ளம், நிலச்சரிவு போன்றவற்றை எதிர்கொள்கிறோம். எமக்கு சுனாமி ஆபத்தும் உண்டு.

அவ்வகையான அவசரநிலைகள் ஏறக்குறைய ஒரேமாதிரியான தாக்கங்களை உண்டாக்கும். அவசிய தேவைகளை பெறுவதும், பிரியமானவர்களுடன் சேர்ந்து கொள்ளவதும் கடினமாக இருக்கும்.

ஒரு பெரிய நிலநடுக்கத்திற்கு பின்னர் வரும் சவாலான நாட்களில், உங்கள் வீட்டிலுள்வர்களும் உங்கள் சமூகமும் பாதுகாப்பாகவும் கூடியளவு வசதியாகவும் இருப்பதற்காக நீங்கள் தயார்படுத்தக் கூடியவற்றை சொல்லியிருக்கிறோம்.

எச்சரிக்கைகளை பெறுவதற்கு நீங்கள் பதிவு செய்வதன் மூலம் இதற்கான முதல் அடியை பூர்த்தி செய்துவிட்டீர்கள்!

இன்றும், இன்று இரவும், அடுத்த சில சனி-ஞாயிறுகளிலும் செய்ய வேண்டியவைகளை செய்து உங்கள் வீட்டிலுள்ளவர்களை தயாராக்குங்கள். ஒவ்வவொரு படியும் நிச்சயமாக உங்கள் உழைப்புக்கேற்ற பயனுள்ளது. உங்களிடம் மேலதிக கேள்விகள் இருந்தால் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

WREMO குழுவிடமிருந்து

(அதுதான் Wellington Region Emergency Management Office)

# நீங்களும் பங்குபற்றுங்கள்

## இலவசமான அவசரநிலை தயார் வகுப்புகள்

உங்கள் வீட்டிலுள்ளவர்களும் சமூகத்தினரும் ஒரு பெரிய நிலநடுக்கத்திற்கு: தயாராக இருக்கவும், நடந்தால் பதில் நடவடிக்கை ஆற்றவும் , பின் அதிலிருந்து மீளவும் அவர்களுக்கு நீங்கள் எவ்வாறு உதவலாம் என்பதையும் கற்றுக்கொள்ளுங்கள்.

ஒரு வகுப்பிற்கு உங்களை பதிவு செய்யுங்கள்: getprepared.nz/Courses

உங்கள் சமூகம் தயாராகவும் பதில் நடவடிக்கை ஆற்றவும் அவர்களுக்கு உதவ நீங்கள் ஒரு WREMO தொண்டராகுங்கள்: getprepared.nz/Volunteer

## வர்த்தகத்தை தொடர்வதற்கான இலவச பட்டறைகள்

நீங்கள் ஒரு வர்த்தக அல்லது சமூக அமைப்பை நடத்துபவராக இருந்தால், ஒரு சின்னதான அல்லது பெரிதான இடருக்கு பின்னரும் அதை தொடர்ந்து நடத்தவே விரும்புவீர்கள். உங்களிடம் வேலை செய்பவர்களும் உங்கள் வாடிக்கையாளர்களும் உங்களில் தங்கியுள்ளார்கள். நீங்களும் உங்களுக்கு வேலை செய்பவர்களும் ஒரு இடருக்குப் பின்னர் தொடர்ந்து செயற்படவும் சிறந்த முடிவுகள் எடுக்கவும் எமது பட்டறைகள் உதவும்.

இதில் பங்குபற்றுவோர் வர்த்தகத்தை தொடர்ந்து இயக்குவதற்கான அடிப்படை அறிவையும், தமது தனியான சொந்த திட்ட வரைபை ஆரம்பிக்கவும் தெரிந்து கொண்டு வெளியேறுவார்கள். வெலிங்டன் பிரதேசம் எங்கும் எமது இரண்டு மணித்தியால பட்டறைகளை நாம் நடத்துகிறோம்

getprepared.nz/Businesses

## சமூக பதில் நடவடிக்கை திட்டங்கள்

உங்களைப் போன்றவர்கள் உங்கள் சமூக பதில் நடவடிக்கை திட்டத்தில் பங்களிக்கிறார்கள். எவ்வகையான திட்டம் போடப்படுகிறது என்றும் அதில் எவ்வாறு நீங்கள் பங்களிக்கலாம் என்றும் அறிந்து கொள்ளுங்கள். உங்கள் சமூகத்தைப் பற்றி உங்களிடம் பெறுமதியான அறிவு இருக்கிறது. இது நிச்சயமாக உதவும்.

getprepared.nz/ResponsePlan

## தொடர்புகளுக்கு:

wremo@gw.govt.nz

04 830 4279

facebook.com/WREMOnz

# உங்கள் சமூக அவசரநிலை மையத்தை தெரிந்து கொள்ளுங்கள்.

சமூக அவசரநிலை மையங்கள் உங்கள் சமூகத்திலுள்ளவர்கள் ஒன்றுகூடும் இடம். இவை முன்னர் சிவில் பாதுகாப்பு மையம் என்று அழைக்கப்பட்டது – அதன் பயனை தெளிவாக்கும் வகையில் பெயரை மாற்றியுள்ளோம்

ஒரு பெரிய நிலநடுக்கத்தின் பின், உங்கள் வளங்களையும்; திறமைகளையும் உபயோகித்து உங்கள் சமூகத்தின் பதில் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க உங்களைப் போன்ற உள்ளூர்வாசிகள் உங்கள் உள்ளூர் மையத்தில் ஒன்றுகூட வேண்டும்.

உங்கள் உள்ளூர் மையம் எங்கே இருக்கிறது என்பதை எமது வலைத்தளத்தில் தெரிந்து கொள்ளுங்கள் www.getprepared.nz/Hubs

உள்ளூர்வாசிகளின் செயற்பாடுகளுக்கான அடிப்படை ஆரம்ப தேவைகள் இம்மையங்களில் இருக்கும். உதாரணமாக: பேப்பர்-பென்சில், AM/FM ரேடியோ, நில வரைபடங்கள் மற்றும் உங்கள் கவுன்சிலின் அவசரநிலை செயற்பாட்டு நிலையத்துடன் தொடர்பு கொள்ள சிவில் பாதுகாப்புக்கான இருவழி ரேடியோ கருவி.

இவற்றைவிட மேலதிகமாக எவ்வித அவசரநிலை காலத்தில் கொடுக்கப்படும் வழங்கீடுகளும் இம்மையத்தில் இருக்காது.




**நாங்கள் தயார்**

எமது உள்ளூர் மையம் எங்கிருக்கிறது என்றும் எமது சமூகத்திற்கு எவ்வாறு உதவலாம் என்றும் எமக்கு தெரியும்.

# 2. விழு-மூடு-பிடி பயிற்சி செய்யுங்கள்

நிலநடுக்கத்தின் போது நீங்கள் விழு-மூடு-பிடி செய்தால் உங்களுக்கு காயங்கள் வரக்கூடிய சந்தர்ப்பங்கள் குறையும் என்பது சர்வதேச நிபுணர்களுக்குத் தெரியும்.

நிலநடுக்கத்தின்போது வரக்கூடிய அதிகமான காயங்கள் வீடு சரிந்து விழுவதால் ஏற்படுவதைவிட தளபாடங்களாலும், அலங்காரப் பொருட்களாலும், கூரை ஓடுகள் போன்ற வீட்டில் பொருத்தி உள்ளவற்றாலுமே உண்டாகிறது.

## நிலநடுக்கத்தின் போது:

வீட்டின் உள்ளே – நிலநடுக்கம் நிற்கும் வரைக்கும், வெளியேறுவது பாதுகாப்பாகும் வரைக்கும், உள்ளேயே இருங்கள். விழக்கூடிய பொருட்களைத் தவிர்த்து கட்டிடத்தைவிட்டு கவனமாக வெளியேறுங்கள்.

உயரமான கட்டிடத்தில்: மேலே சொன்னது போலவே தீ எச்சரிக்கை மணி அடிக்கிறது என்பதற்காக அவசரமாக வெளியேற வேண்டாம்.

கட்டிடங்களுக்கு வெளியே: உயரமான கட்டிடங்கள், மரங்கள், மின்சார கம்பிகள் போன்வற்றின் அருகிலிருக்காமல் தள்ளி போய் நிலநடுக்கம் நிற்கும் வரை விழு-மூடு-பிடி செய்யுங்கள்.

போக்குவரத்து அதிகமுள்ள வீதியில்: உங்களை சுற்றியிருக்கும் கட்டிடங்களிலிருந்து பொருட்கள் உங்கள் மேல் விழக்கூடும். ஆகையால் நடைபாதையில் நிற்காதீர்கள்.

உங்களால் விழு-மூடு-பிடி செய்ய முடியாவிட்டால், உங்களால் முடிந்தளவு உங்கள் தலையையும் கழுத்தையும் பாதுகாப்பதற்கான வழியை தேடுங்கள்.



# 3. உங்கள் சுனாமி வலயத்தை அறியுங்கள்

நிலநடுக்கத்தின் போது நீங்கள் கரையோரப் பகுதிகளில் இருக்க நேர்ந்தால், நடுக்கம் பெரிதாகவோ நீண்டதாகவோ இருந்தால், அந்த இடத்தைவிட்டு வெளியேறுங்கள்.

உள்ளூர் நிலநடுக்கத்தின் போது நிலநடுக்கம் மட்டுமே உங்களுக்கு கிடைக்கும் சுனாமி எச்சரிக்கையாக இருக்கும்.

சுனாமி என்பது தொடர்ந்து வரும் பல அலைகளைக் கொண்டது. இது பல மணித்தியாலங்களுக்கு தொடரலாம். முதலில் வரும் அலைதான் பின்பு தொடர்ந்து வரும் அலைகளை விட பெரிதாக இருக்கும் என்று சொல்லிவிட முடியாது. உடனடியாக பாதுகாப்பான இடத்திற்கு வெளியேறி நீலநிற சுனாமி கோட்டை தாண்டுங்கள்.

எல்லோரும் எவ்வாறு பாதுகாப்பான இடத்திற்கு போகலாம் என்று அயலவர்களுடன் உரையாடுங்கள் சிலருக்கு மேலதிக உதவிகள் தேவைப்படலாம்.

நீங்கள் வசிக்கும், விளையாடும் அல்லது வேலை பார்க்கும் இடங்கள் சுனாமி வலயங்களில் உள்ளனவா என்பதையும் அங்கிருந்து எவ்வாறு பாதுகாப்பான இடத்திற்கு செல்வது என்பதையும் அறிந்து வையுங்கள்.

**getprepared.nz/TsunamiZone**

சுனாமியை தொடர்ந்து, 'யாவும் இப்போது பாதுகாப்பானது' என்ற அறிக்கை வரும்வரை கரையோரப் பகுதிகளுக்கோ நீருக்குள்ளோ போக வேண்டாம்.



10 MIN

முதல் அலை 10 நிமிடங்களுக்குள் வந்து விடலாம். ஆகையால் எச்சரிக்கையொலி போன்ற அதிகாரபூர்வ அறிவிப்புகள் கொடுப்பதற்கு நேரம் போதாது. தெற்கு அமெரிக்கா போன்ற வெகுதொலைவான இடங்களில் ஆரம்பமாகும் சுனாமிக்கே நாம் எச்சரிக்கை கொடுப்போம்.

# 4. வீட்டுக்கு ஒரு திட்டம் உருவாக்குங்கள்

பெரிய ஒரு நிலநடுக்கத்தின் பின் உங்களால் தொலைபேசி பாவிக்கவோ, மின்னஞ்சல் அனுப்பவோ அல்லது ஒரு சமூக ஊடகத்தை பாவிக்கவோ முடியாமல் இருக்கலாம். தொடர்புகள் எடுக்க முடியாத நேரத்தில் என்ன செய்வீர்கள் என்பதை இப்போதே திட்டமிடுங்கள்.

## பிள்ளைகளை பாதுகாப்பாக வைத்திருங்கள்

பள்ளிக்கூடங்கள் உங்கள் பிள்ளைகளைப் பாதுகாப்பாக வைத்திருக்கத் திட்டங்கள் வைத்திருக்கிறார்கள்.

உங்கள் பள்ளிக்கூடத்தின் அவசரநிலை திட்டத்தை இங்கே பார்த்து அறியுங்கள்: getprepared.nz/schools

பள்ளிக்கூடத்திலிருந்து நடந்து செல்லக்கூடிய இடத்தில் வாழும் குறைந்தது மூன்று நண்பர்களிடமோ அல்லது உறவினர்களிடமோ பிள்ளைகளைச் சென்று பொறுப்பேற்றுக் கொள்ளும்படி சொல்லி வையுங்கள். அவர்களின் பெயர்களைப் பள்ளிக்கூடத்திடம் கொடுத்து வையுங்கள்.

உங்களால் பள்ளிக்கூடத்திற்கு சென்று பிள்ளைகளை அழைத்துச் செல்ல முடியாத போது, யார் வந்து அழைக்கக்கூடும் என்பதைப்பற்றி பிள்ளைகளுடன் உரையாடுங்கள்.

## பாதுகாப்பான ஒரு சந்திக்கும் இடத்தை சேர்ந்து தீர்மானியுங்கள்

எல்லோரும் ஒருவரை ஒருவர் கண்டுகொள்ள ஒரு இடத்தை தீர்மானியுங்கள். தேவையானால் ஒரு நண்பரினதோ உறவினரினதோ இடத்தில் தங்குவதற்கு ஒழுங்குகள் செய்து வையுங்கள்.

## வீட்டிற்கும் வீட்டில் உள்ள பொருட்களுக்குமான காப்புறுதியை ஒழுங்குபடுத்துங்கள்.

அதிகமானோர் தமது பொருட்களின் பெறுமதிக்குக் குறைவானதொரு காப்புறுதியையே வைத்திருப்பார்கள். உங்கள் வீட்டினதும் உங்கள் உடைமைகளினதும் பெறுமானத்திற்கான காப்புறுதி உங்களிடம் உள்ளதா என்பதை உறுதிப்படுத்துங்கள். உங்களுக்கு அண்மையிலுள்ள ஒரு காப்புறுதி அமைப்புடன் தொடர்பு கொள்ளுங்கள்.



## வீட்டிலும் வேலைத்தளத்திலும் வெளியேறு-பை ஒன்றை ஒழுங்கு செய்யுங்கள்.

நீங்கள் அவசரமாக வீட்டிலிருந்து வெளியேற வேண்டி வரலாம். அல்லது வேலைத்தளத்திலிருந்து வீட்டிற்கு நீண்ட தூரம் நடக்க வேண்டி வரலாம். அடுத்த சில மணித்தியாலங்களுக்கோ அல்லது சில நாட்களுக்கோ தேவையான அவசிய பொருட்களை சுலபமாக கையில் எடுத்துச்செல்ல பை (வெளியேறு-பை) ஒன்றை தயாராக ஒழுங்கு செய்து வையுங்கள். இதை நீங்களே தயார் செய்யலாம். அதிக விலைகொடுத்து இதை வாங்க வேண்டியதில்லை.

## சேவைகள்

சேதமடைந்த சேவைகள் ஆபத்தை விளைவிக்கும். இதனால் நீங்கள் வீட்டில் தங்க முடியாமல் போகலாம்.

உங்கள் வீட்டிற்கு எரிவாயு இருந்தால் எரிவாயுவின் முதன்மை வால்வையும், மின்சாரத்தின் முதன்மை சுவிச்சையும், முதன்மை தண்ணீர் விநியோக வால்வையும் தெரிந்து வையுங்கள். அவற்றை எவ்வாறு நிறுத்துவது என்பதையும் தெரிந்து வையுங்கள். எளிதாக கண்டுகொள்ளும் வகையில் அவற்றை அடையாளப்படுத்தி வையுங்கள்.

getprepared.nz/GrabBag



# 5. உங்கள் வீட்டை பாதுகாப்பானதாக செய்யுங்கள்

உங்கள் நீர்க்கொள்கலன்களை பாதுகாப்பானதாகச் செய்யுங்கள்

செங்கற் புகைபோக்கிகள் பாதுகாப்பாக உள்ளதா என்பதை உறுதிப்படுத்துங்கள். புகைபோக்கியை நீங்கள் உபயோகிக்காவிட்டால் அதை அகற்றி விடுங்கள்.

உங்கள் வீட்டை பாதுகாப்பானதாக செய்தால் நிலநடுக்கத்தின் போது ஏற்படும் அழிவுகளை குறைத்து உங்கள் வீடு சிறிது குப்பையாக போனாலும் நீங்கள் தொடர்ந்தும் உங்கள் வீட்டில் தங்கக்கூடியதாக இருக்கும்.

கூரை, சுவர்கள், தளபாடங்கள், அத்திவாரம் ஆகியன பாதுகாப்பானதா என்று உறுதிப்படுத்துங்கள்

உதவி தேவையென்றால் ஒரு அனுபவம் வாய்ந்த கட்டிட தொழிலாளரை கொண்டு உங்கள் வீட்டை சரிபாருங்கள்.

உங்கள் வீட்டின் நிலநடுக்கத் தகைமையை உறுதிப்படுத்துவது பற்றி அறிய:
www.getprepared.nz/SafeHomes

## நீங்கள் வாடகை வீட்டிலிருந்தால்


நிலநடுக்கத்தின் பின்னும் உங்கள் வீடு வசிப்பதற்கு உரியதாக இருப்பது உங்கள் வீட்டின் சொந்தக்காரருக்கும் நன்மையானதே. ஆதலால் இந்த வழிகாட்டியை பாவித்து இதுபற்றி அவர்களுடன் உரையாடுங்கள்.

உங்கள் கூரையிலுள்ள தவறிப்போன மற்றும் உக்கிபோன மரங்களை மாற்றுங்கள்.

பலப்படுத்தாத சீமெந்து சுவர்களுக்கு மேலதிக பாரம் தாங்கும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுங்கள்.

உயரமான அல்லது கனமான தளபாடங்களை பாதுகாப்பானதாக்குங்கள்.

சுடுநீர் கொள்கலன்களையும் ஆதாரமில்லாது நிற்கும் விறகு அடுப்புக்களையும் பாதுகாப்பானதாக்குங்கள்.



# 6. நீர் சேகரித்து வையுங்கள்

ஒரு பெரிய நிலநடுக்கத்தின் பின் குழாயில் நீர் வரப்போவதில்லை. ஆகையால் அவசர தேவைக்கான நீர் உங்களிடம் இருக்க வேண்டும். எவ்வளவு அதிகமாக நீரை சேகரித்து வைக்க முடியுமோ அவ்வளவுக்கு நல்லது. உங்கள் வீட்டிலுள்ளவர்களுக்கு ஒரு கிழமைக்கு போதுமான அளவு நீர் நீங்கள் வைத்திருக்க வேண்டும்.

அவசரநிலையில் உங்களுக்கு தேவையான அளவு நீர் இருப்பதற்கு, ஒரு 200 லீட்டர் (முடிந்தால் அதையும் விட பெரிதான) நீர்கொள்கலனை வாங்கி வையுங்கள். இவை அதிகம் விலையில்லை. இதை நீங்களே பொருத்திக்கொள்ளலாம்.

இதை பாதுகாப்பாக பொருத்தி, குழாயில் வரும் நீரை இதில் நிரப்பி விடுங்கள்.


getprepared.nz/Water

உங்களால் நீர்க்கொள்கலனை பெற்றுக்கொள்ள முடியாவிட்டால் சிறிதளவு நீரையாவது சேமித்து வைத்திருப்பது ஒன்றுமில்லாமல் இருப்பதைவிட சிறந்தது!

பெரிய பிளாஸ்டிக் நீர் போத்தல்களில் நீரை சேமியுங்கள். பழைய பால் போத்தல்களை உபயோகிக்க வேண்டாம். ஏனெனில் பாலின் எச்சங்கள் இருந்தாலும் அவை நீரை பழுதடையச் செய்யும்..

ஒவ்வொரு போத்தலையும் அது நிரம்பி வழியும்வரை நிரப்புங்கள். மூடியை இறுகப்பூட்டி ஒரு குளிர்மையான இருட்டான இடத்தில் சேமித்து வையுங்கள். 12 மாதங்களுக்கு ஒரு முறை புதிய நீர் விட்டு மீள நிரப்புங்கள்.



# 7. அயலவர்களை சந்தியுங்கள்

அதிகமானோர் அருகில் இருந்தவர்களாலேயே காப்பாற்றப்படுகிறார்கள். உங்கள் அயலவர்கள் தான் உங்களுக்கு உதவ முதலில் வருவார்கள்.

இந்த சனி-ஞாயிறு உங்கள் தெருவிலுள்ள சிலருடன் தொடர்பை ஏற்படுத்துங்கள். அப்போதுதான் அவசரநிலையின் போது:

* எல்லோரும், முக்கியமாக மேலதிக உதவி தேவைப்படுவோர்கள், பாதுகாப்பாக உள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்தலாம்
* ஒருவருக்கொருவர் உதவியாக இருக்க வளங்களையும் திறமைகளையும் பகிர்ந்து கொள்ளலாம்
* தொடரும் நாட்களில் ஒருவருக்கொருவர் ஆதரவாக இருந்து கொள்ளலாம்.


getprepared.nz/Neighbours

அதற்கும் மேலாக, நட்பான, எதையும் தாங்கும் சக்திகொண்ட ஒரு சமூகத்தை கட்டியெழுப்ப நீங்கள் உதவுவீர்கள்.

ஒரு புன்முறுவலுடனும் அறிமுகத்துடனும் ஆரம்பியுங்கள். முதல் படிதான் எப்போதும் கடினமானது! அவசரநிலையின் போது ஏற்படக்கூடிய தேவைக்காக உங்களில் சிலர் தொடர்புகளை பரிமாறிக்கொள்ளலாம் என்று யோசனை சொல்லுங்கள். உரையாடலை ஆரம்பிக்க இது ஒரு எளிதான வழி.

ஒரு வீதிக்கான 'அயலவர் ஆதரவுக் குழுவை' நீங்கள் ஆரம்பிக்கலாம் அல்லது உள்ளூர் 'நேரவங்கியில்' (Time Bank) சேர்ந்து கொள்ளலாம்.

சில கிழமைகளின் பின்னர் தொடர்புகளைப் பலமாக்க ஒரு பார்பக்கியூவை (BBQ) அல்லது ஒரு தொண்டர் வேலைக் குழுவை (Working Bee) ஒழுங்கு படுத்துங்கள்.



# 8. வீட்டில் முகாம் போட்டுப்பாருங்கள்

ஏற்கனவே உங்கள் வீட்டில் அவசரநிலைக்கான பொருட்கள் நாளாந்த பாவனைப் பொருட்களாக இருக்கின்றன.!

உங்கள் கட்டிலில் இருக்கும் கம்பளிகள், அலமாரியில் இருக்கும் உடைகள் மற்றும் சமையலறையில் இருக்கும் பொருட்கள் எல்லாம் அவசரநிலையின் போது நீங்கள் உபயோகிக்கலாம்.

* உங்களிடம் குழந்தைகள், குறுநடைப்பருவத்தினர் மற்றும் செல்லப்பிராணிகள் இருந்தால் அவர்களுக்குத் தேவையான பொருட்களை எடுத்துக் கொள்ளுங்கள்.
* நீங்கள் எடுக்கும் மருந்துகளின் பட்டியல் ஒன்றை வைத்திருங்கள். போதிய அளவு உங்களிடம் இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்களையும் உங்கள் வீட்டிலுள்ளவர்களையும் நீங்கள் கவனித்துக்கொண்டால், அவசரநிலை சேவைகளுக்கும் நீங்கள் உதவி செய்பவராவீர்கள். இதனால் அவர்கள் தமது மட்டுப்படுத்தப்பட்ட வளங்களை அதிக உதவி தேவைப்படுவோருக்கு வழங்க முடியும்.



ஒரு கிழமைக்கு கடைக்கு போக வேண்டிய தேவை இல்லாத வகையில் உங்கள் உணவுக் களஞ்சியத்தை நிரப்பி வைத்திருங்கள்.

~~1~~ ~~2~~ ~~3~~ ~~4~~ ~~5~~ ~~6~~ ~~7~~ நாங்கள் தயார்! ✓ அவசரநிலையில் ஒரு கிழமைக்கு தேவையான பொருட்கள் எம்மிடம் உள்ளன.



## நீங்கள் getprepared.nz வலைத்தளத்தில் இருக்கும் போது:

1. உங்கள் உள்ளூர் மையத்திற்கான சுட்டியை அழுத்தி உங்கள் சமூகத்தின் பதில் நடவடிக்கைத் திட்டத்தைப் பற்றி அறிந்து கொள்ளுங்கள்.
2. சுனாமி வெளியேற்ற வலயம் வரைபடத்தை பார்த்து நீங்கள் வாழும், வேலைசெய்யும், மற்றும் விளையாடும் இடங்கள் சுனாமி வெளியேற்ற வலயத்தில் உள்ளனவா என்பதை அறிந்து கொள்ளுங்கள்.
3. WREMO வலைத்தளத்தை பாருங்கள்: www.wremo.nz அவசரநிலைக் காலங்களில் நம்பிக்கையான தகவல்களை பெற நீங்கள் இங்கேதான் போவீர்கள்.

# நாங்கள் தயார்!

## வீட்டிலுள்ளவர்கள் ஒன்றாக சந்திக்கும் இடம்

## பிள்ளைகளை அழைத்துச்செல்லக் கூடியவர்களின் தொடர்புகள்

## எங்கள் சமூக அவசரநிலை மையம்

## எங்கள் அயலவர்களின் தொடர்புகள்:

## எங்கள் சேவைகள்

தண்ணீர்:

மின்சாரம்:

எரிவாயு:

அவசரநிலை தயார்நிலைக்கான தகவல்களை பெற www.getpreapred.org.nz பாருங்கள்:

# நிலநடுக்கத்தின் பின்:

### சுனாமி ஆபத்து இருக்கிறதா?

* கரையிலிருந்துதூரமாக உள்ளநிலப்பக்கமாகவோ அல்லது மலை மேலோ நடந்து அல்லது சைக்கிளில் விரைவாக பாதுகாப்பான இடத்தை அடையுங்கள். ஆனால் காரில் போக வேண்டாம்.
* நீல நிற சுனாமி அம்புக்குறிகளையும் வெளியேறு பாதைகளுக்கான அறிவிப்பு குறிகளை பின்பற்றி அண்மையிலுள்ள பாதுகாப்பான இடத்தை அடையுங்கள் அல்லது நீல நிற சுனாமி கோட்டை தாண்டுங்கள். உங்களின் பின் வெளியேறுவோருக்கு இடம் கொடுப்பதற்காக தொடர்ந்தும் செல்லுங்கள்.

### மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்:

* வீடு திரும்ப முயற்சிக்கும் முன்னர் நீங்கள் தெரிவு செய்த இடத்தில் ஒன்று சேருங்கள்.
* முடிந்தால், நீங்கள் பாதுகாப்பாக இருக்கிறீர்கள் என்பதை சமூக வலைத்தளங்கள் ஊடாகவோ குறுஞ்செய்தி ஊடாகவோ மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள் இச்சேவைகளின் பாவனையைக் குறைவாக வைத்திருப்பதற்காக அழைப்புகள் எடுக்க வேண்டாம். குறுஞ்செய்தி அனுப்புங்கள்.

இந்த www.wremo.nz வலைத்தளத்தை பார்வையிட்டு அல்லது ரேடியோவில் கேட்டு அவசரநிலை செய்திகளை அறிந்து கொள்ளுங்கள்.

### உங்கள் வீட்டை பாதுகாப்பானதாக செய்யுங்கள்

* எரிவாயு வெளியேறும் சத்தம் கேட்டால் அல்லது மணந்தால் அது வெடிக்காமல் தடுப்பதற்காக எரிவாயு வால்வை மூடுங்கள்.
* மின்சாரம் தடைபட்டிருந்தால் அல்லது நீங்கள் வெளியேற வேண்டியிருந்தால் மின்சாரத்தை மெயின் சுவிச்சில் நிறுத்துங்கள். உங்கள் கண்களுக்கு தென்படாவிட்டாலும் மின்சார வயர்கள் பாதிக்கப்பட்டிருக்கலாம்.
* நீர் குழாய்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று நீங்கள் சந்தேகித்தால் முதன்மை தண்ணீர் வால்வை பூட்டுங்கள். வெளியேறும் நீர் உங்கள் வீட்டிற்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

### உங்கள் சமூக அவசரநிலை மையத்திற்கு செல்லுங்கள்

* உங்களுக்கு உதவி தேவைப்பட்டால்
* உங்கள் திறமைகளையும் வளங்களையும் பகிர்ந்து உதவி கொடுக்க முடியுமானால்
* உங்கள் அயலில் நடந்தவற்றைப்பற்றிய செய்திகளை சேகரிக்கவும் பரிமாறிக்கொள்ளவும்
* உங்கள் சமூகத்தின் உள்ளூர் பதில் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும் உங்கள் கவுன்சிலின் அவசரநிலை செயற்பாட்டு நிலையத்திற்கு தகவல்களை சொல்லவும்

### நீரும் சுகாதாரமும்

* சுத்திகரிக்கப்படாத நீரை ஒரு நிமிடம் கொதிக்க வைத்து அருந்துங்கள் அல்லது வீட்டில் உபயோகிக்கும் வாசனையூட்டப்படாத நிறநீக்கியில் (bleach) ½ சின்னக்கரண்டி அளவை 10 லீட்டர் நீருக்குள் விட்டு 30 நிமிடங்களுக்குப் பின் அருந்துங்கள்.
* கழிப்பறையில் நீரடித்துகழுவ (flush) வேண்டாம். முடிந்தால் உங்கள் கழிவுகளைப் போட குழி தோண்டுங்கள். துப்பரவாக இருங்கள்.

### பிள்ளைகளை அழைத்து வாருங்கள்

* எல்லோருக்கும் திட்டம் என்ன என்பது தெரியும் என்பதை உறுதிப்படுத்துங்கள். உங்கள் பிள்ளைகள் எங்கோ பாதுகாப்பாக இருக்க, தேவையில்லாமல் பள்ளிக்கூடத்திற்கு போய் உங்களுக்கு ஆபத்தை விளைவிக்க வேண்டாம். ஆபத்தில்லை என்று உறுதி செய்த பின் பிள்ளைகளை அழைத்து வாருங்கள்.

### அயலவர்களைச் சென்று பாருங்கள்

* தனியாக வசிப்போரையும், நகரும் ஆற்றல் குறைந்தவர்களையும், மேலதிக உதவி தேவைப்படுவோரையும் கவனித்துக்கொள்ளுங்கள்.
* உங்கள் திறமைகளையும் வளங்களையும் பகிர்ந்து ஒருவருக்கொருவர் ஆதரவு கொடுங்கள்.